ஒற்றுமையையும் வலிமையையும்
கொண்டாடுதல்!

# தனித்து வாழும் பெண்களுக்கான கொள்கை அறிக்கை, தமிழ்நாடு

மார்ச் 2023

உருவாக்கம்:
மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு

# ஒற்றுமையையும் வலிமையையும் கொண்டாடுதல்

## தனித்து வாழும் பெண்களுக்கான கொள்கை அறிக்கை, தமிழ்நாடு

மார்ச் 2023

மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு சென்னை
m: 86680 91453 | e: womensrights@hrf.net.in | www.hrf.net.in

## மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு (HRF)

மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு சமூகத்தில் ஒதுக்கப்பட்ட மற்றும் விளிம்பு நிலை மக்களின் உரிமைகளை பாதுகாத்து ஊக்குவிக்கும் நோக்கில் மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் செயல்பட்டு வருகிறது.

HRF சட்டம் மற்றும் அரசு நிறுவனங்கள் குறித்த தெளிவான கண்ணோட்டங்களை எளிமையான முறையில் வழங்குவதன் மூலம் சமூகரீதியாக ஒதுக்கப்பட்ட மக்களின் திறன்களை வளர்த்து அவர்களை தங்கள் உரிமைகளை பயன்படுத்திக்கொள்ளவும், முடிவெடுப்பதில் அவர்களின் பங்கை அதிகரிக்கவும், மற்ற பொறுப்புடைய அரசு நிறுவனங்கள் மற்றும் பங்குதாரர்களுடன் பேச்சுவார்த்தை மற்றும் உரையாடல் மூலம் ஜனநாயகத்தை ஆழப்படுத்திட உதவுகிறது.

மேலும் மனித உரிமை செயல்பாட்டாளர்களுக்கு உதவி மற்றும் பாதுகாப்பை வழங்குவதன் மூலம் சட்டத்திலும் சமூகத்திலும் மனித உரிமை கலாச்சாரத்தை நிறுவனமயமாக்கி ஜனநாயகத்தில் பெரிய அளவிலான குடிமைச் சமூக ஈடுபாட்டிற்கு வழிசெய்கிறது.

# ஒற்றுமையையும் வலிமையையும் கொண்டாடுதல்

தனித்து வாழும் பெண்களுக்கான கொள்கை அறிக்கை, தமிழ்நாடு

***தனித்து வாழும் பெண்களுக்கான முதல் மாநில மாநாடு, 2023 மார்ச் 8 அன்று நாங்கள்,***

அனைத்து தனித்து வாழும் பெண்களுக்கும் கண்ணியமாக வாழ்வதற்கான உரிமை உண்டு என்பதையும், அவர்கள் தற்சார்பும், மேம்பாடும் அடைவதற்கும், அவர்கள் தங்களது திறமைகளை முழுமையாகப் பயன்படுத்தி சாதிப்பதற்கும் ஏற்ற சூழலை உறுதிப்படுத்த வேண்டியது அரசின், மற்றும் சமுதாயத்தின் கடமை என்பதையும் *வலியுறுத்துகிறோம்.*

சாதி, வர்க்க, மத, அந்தஸ்து வேறுபாடு இல்லாமல் பெண்களை சட்டத்தின் முன் (14-வது பிரிவு) சமத்துவமான குடிமக்களாக இந்திய அரசியலமைப்புச் சட்டம் அங்கீகரிக்கிறது என்பதையும், சமத்துவத்துக்கும், பாகுபாடில்லாமைக்குமான உரிமையை (15-வது பிரிவு), அரசு வேலைவாய்ப்பில் சம வாய்ப்புக்கான உரிமையை (16-வது பிரிவு), கண்ணியத்துடன் வாழ்வதற்கான உரிமையை (21-வது பிரிவு) உறுதி செய்கிறது என்பதை *நினைவுகூர்கிறோம்.*

*மேலும்,* பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் அகற்றுவது குறித்த ஐ.நா. ஒப்பந்தம், (UN Convention on the Elimination of All forms of Discrimination Against Women - CEDAW), 1993-ல் இந்தியாவும் ஒப்புதல் அளித்துள்ளது. *பெண்களுக்கு சம உரிமைகளைப் பெற்றுத் தருவதற்கும், பாகுபாடான சட்டங்கள் மட்டுமல்லாமல் நடைமுறைகள், சடங்குகள் மற்றும் பெண்களுக்கு எதிராக தனிப்பட்ட குடிமக்கள் மேற்கொள்ளும் சமுதாயரீதியான பாகுபாடுகளுக்குத் தீர்வு காண்பதற்கும், ஒரு பாலினம் உயர்ந்தது அல்லது ஒரு பாலினம் தாழ்ந்தது என்ற கருத்தின் அடிப்படையில் அமைந்த தவறான எண்ணங்கள், பழக்க, வழக்கங்கள் மற்றும் இதர நடைமுறைகள் அனைத்தையும் மாற்றுவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதற்கும்''* (பிரிவு 5 (a)) *உறுதிபூண்டுள்ளது.*

2016-ல் தேசிய பெண்கள் கொள்கை குறிப்பு முன்வடிவிலும், 2021-ல் தமிழ்நாடு அரசின் பெண்கள் கொள்கை குறிப்பிலும் தனித்து வாழும் பெண்கள் பற்றி குறிப்பிட்டிருந்தாலும், 2021-ல் இந்தியாவில் வாழும் 73 மில்லியன் (7 கோடியே 30 லட்சம்) தனித்து வாழும் பெண்கள் எதிர்கொள்ளும் சமூக, பொருளாதார,

மற்றும் கலாச்சார சவால்கள் இன்னும் அங்கீகரிக்கப்படாமல், புறக்கணிக்கப்பட்டு வருகின்றன என்பதை *கவனத்தில் கொண்டு வருகிறோம்.*

ஆணாதிக்க சமூக அமைப்பு கொண்ட இந்தியாவில், பெண்கள் சமூகத்திலும் அவர்களது குடும்பங்களிலும் வன்முறைக்கும், தவறான எண்ணங்களுக்கும், விலக்கி வைக்கப்படுவதற்கும் உள்ளாகிறார்கள். மருத்துவ வசதி, கல்வி போன்ற அடிப்படை சேவைகளைப் பெறுவதற்குக்கூட அவர்கள் தொடர்ந்து இடர்ப்பாடுகளை அனுபவிக்கிறார்கள். முதன்மையாக எல்லோரையும் கவனித்துப் பராமரிக்கின்றவர்களாக இருக்கின்ற அதே வேளையில், நிலத்தையும் பிற சொத்துக்களையும் சொந்தமாக வைத்துக் கொள்வதற்கு அவர்கள் சட்ட ரீதியான, கலாச்சார ரீதியான தடைகளை எதிர்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது. இவை குறித்தும் *கவலை கொள்கிறோம்.*

ஆண் துணைவர் இல்லாத நிலையில் அவர்கள் 'பலவீனமானவர்கள்', 'கிடைக்கக்கூடியவர்கள்', 'கட்டுப்பாடு இல்லாதவர்கள்' என்ற (பாகுபாடு மற்றும் சமூகப் புறக்கணிப்பில் இருந்து எழுகின்ற) பார்வையின் காரணமாக, மற்ற பெண்களைக் காட்டிலும் பெரும் உக்கிரத்துடன் இந்த சவால்களை 'ஒற்றை'ப் பெண்கள் எதிர்கொள்கிறார்கள் என்பது பற்றியும், அந்த வகையில் பாலின அடிப்படையில் பாகுபடுத்தும் மரபுகளால் பொருத்தமற்ற முறையில் குறிவைத்து தாக்கப்படுகிறார்கள் என்பது குறித்தும் *வேதனை அடைகிறோம்.*

விதவைகள், ஆதரவற்ற பெண்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நலவாரியம் (G.O.(Ms) No.56, SW&WE துறை தேதி: 02.09.2022) அமைத்து, தமிழ்நாடு அரசு இந்த இயக்கத்தில் நல்ல தொடக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது என்பதை *ஏற்றுக்கொள்கிறோம்.*

**எனவே நாங்கள் அரசையும், சமுதாயத்தையும் பின்வருவனவற்றை கேட்டுக்கொள்கிறோம்:**

*ஒப்புக்கொள்ளவும்* - மகிழ்ச்சியான வாழ்க்கை என்பது அனைத்துப் பெண்களுக்குமான உரிமை. சமுதாய கட்டாயத்தின் காரணத்தினாலோ, அரசு கொள்கைகளின் காரணத்தினாலோ தனித்து வாழும் பெண்கள் தங்களது விருப்பத்திற்கு எதிராக தனித்து வாழும்படி அல்லது திருமணம் செய்துகொள்ளும்படி நிர்ப்பந்திக்கப்பட கூடாது.

*அங்கீகரிக்கவும்.* எக்காரணத்திற் கொண்டும் ஓராண்டு காலத்துக்கும் மேலாக எந்த ஆண் துணையுமின்றி வாழும் பெண்கள் அனைவரும் தனித்து வாழும் பெண்கள். பெண்களை ஆண்களின் உறவுமுறைகளின் மூலம் வரையருப்பதன் மூலம் சமுதாயத்தின் ஆணாதிக்க விழுமியங்களை 'தனித்து வாழும் பெண்' என்ற சொல் பிரதிபலிக்கிறது. இது சமூக ரீதியாக கட்டமைக்கப்பட்ட பாதிப்புகளை உருவகிப்பதோடு மட்டுமில்லாமல் ஆணாதிக்கத்தால் ஒதுக்கி வைக்கப்படுகிற தன்னம்பிக்கை கொண்ட பெண்களையும் களங்கப்படுத்துகிறது. இந்த ஆணாதிக்க கட்டமைப்பில் தற்-சார்பு உடைய பெண்களுக்கு இடமில்லை. சில பெண்கள் தனியாக இருப்பதை தேர்ந்தெடுக்கிறார்கள். கணிசமான எண்ணிக்கையில் உள்ள அவர்கள், அவர்களது குடும்பங்களில் வருமானம் ஈட்டக்கூடிய ஒரே நபராகவும் இருக்கிறார்கள் என்பதை நாம் உணர வேண்டும்.

'தனித்து வாழும் பெண்' என்றால் விதவைகள் மட்டுமே என்ற தவறான கருத்து பெரும்பாலும் உள்ளது. *ஒரு குறிப்பிட்ட வயதுக்கு மேல் திருமணம் செய்து கொள்ளாத பெண்கள், திருமணமாகி கணவரை பிரிந்த பெண்கள், கைவிடப்பட்ட மற்றும் ஆதரவின்றி தனித்துவிடப்பட்ட பெண்கள், விவாகரத்து பெற்ற பெண்கள், கணவர் காணாமல் போன பெண்கள், மற்றும் தனித்து வாழும் தாய்மார்கள்* ஆகியோர் வரையறைக்குள் சேர்க்கப்படுவதில்லை. மேலும், தனியாக இருத்தல் என்பது தற்காலிகமான கட்டம் என்ற தவறான கருத்தோட்டமும் உள்ளது. எனவே வயது வந்த மகன் இருக்கும் தாய்க்கும் சமூக பாதுகாப்பு தேவை என்பது பெரிதும் கருத்தில் கொள்ளப்படுவதில்லை. ஒரு பெண்ணுக்கு அவளுக்குடைய தனி அடையாளம் இல்லை, தேவையும் இல்லை எனவும் அவர்களுக்கு தற்-சார்புடன் இருப்பதற்கான உரிமை இல்லை எனவும் தவறாக நம்பப்படுகிறது.

வயது, மணவாழ்க்கை நிலை, ஆகியவற்றோடு வர்க்கம், சாதி, (மாற்று) திறன், பாலினம், இனம், மதம் போன்றவற்றின் குறுக்கீடுகள் ஒன்றுக்கொன்று ஏற்படுத்தும் விளைவுகளால் தனித்து வாழும் பெண்கள் மேலும் ஒதுக்கப்படுகிறார்கள். களங்கம் காரணமாக தனித்து வாழும் பெண்கள் மற்றும் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மறைக்கப்படுகின்றன. இது அவர்களின் வாழ்வாதாரம், கல்வி, வருமானம், சொத்து, மற்றும் குடும்ப ஆதரவு ஆகியவற்றினை பெரும் திறனை மேலும் குறைக்கிறது.

தனித்து வாழும் பெண்கள் எதைச் செய்யலாம், எதைச் செய்யக் கூடாது என்பதை சமூகம் பெரும்பாலும் கட்டுப்படுத்துகிறது. அவர்களின் சமூக

தொடர்புகள், கலந்துரையாடல்கள் பொது அல்லது தனிப்பட்ட கண்டிப்புடன் கட்டுப்படுத்தப்படுகிறது. தனித்து வாழும் பெண்ணின் தன்னுரிமையானது குடும்பத்துக்கு உள்ளேயும் வெளியேயும் தடைசெய்யப்படுகிறது. இதற்கும் மேலாக, 'சூனியக்காரி' போன்ற முத்திரைகளும் அவர்கள் மீது குத்தப்படுகிறது. அமங்கலமானவர்கள் அல்லது தீய சகுனத்தைக் குறிப்பவர்கள் என்ற எண்ணத்தில் அவர்கள் குடும்ப நிகழ்ச்சிகளில் இருந்து ஒதுக்கி வைக்கப்படுகிறார்கள்.

தனித்து வாழும் பெண்கள் அதிகாரம் பெறுவதற்கான ஏற்ற சூழலை உருவாக்குவதற்காக, திருமணம் ஆகாத பெண்கள், விதவைகள், விவாகரத்தான பெண்கள், ஓராண்டு அல்லது அதற்கும் மேலாக கணவர்களைப் பிரிந்த பெண்கள், அனைவரையும் தனித்து வாழும் பெண்கள் என கருத வேண்டும். தந்தை, கணவர், அல்லது மகன் போன்ற தங்கள் குடும்பத்தில் உள்ள ஆண் உறுப்பினர்களுடன் இணைக்கப்படாத அனைத்து பெண்களையும் உள்ளடக்கிய ஓர் வரையறையை நாம் கொண்டு வர வேண்டும்.

*உணரவும்.* தனித்து வாழும் பெண்கள், பல்வேறு வழிகளில் தன் விருப்பதுடனோ இல்லாமலோ பல்வேறு காரணங்களால் தனியாக இருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் திட்டவட்டமான செயல்பாடு தேவைப்படுகிறது. அப்போதுதான் அவர்கள் ஒரு முழுமையான, கண்ணியமான, வாழ்க்கையை, தற்சார்புடன் வாழ முடியும். அவர்களின் தேவைகள், அவர்களது சமூகம், வாழ்க்கை கட்டம், பிரதேசம், மற்றும் மதம் ஆகியவற்றை சார்ந்து வேறுபடுகின்றன. உதாரணம், ஆசிட் தாக்குதலுக்கு ஆளாகி உயிர் பிழைத்த பெண்ணுக்காக உருவாக்கப்படும் ஆதரவு அமைப்புகள், கணவர் காணாமல் போனதால் பாதிக்கப்பட்ட மீனவப் பெண்ணுக்குத் தேவையான ஆதரவு அமைப்புகள், சாதிக் கொடுமையால் கணவர் படுகொலைக்கு ஆளானதால் பாதிக்கப்பட்ட ஆதிதிராவிடப் பெண்ணுக்குத் தேவையான ஆதரவு அமைப்புகள், காட்டுப் பகுதியில் கணவர் கொல்லப்பட்டதால் பாதிக்கப்பட்ட பழங்குடிப் பெண்ணுக்குத் தேவையான ஆதரவு அமைப்புகள் அனைத்தும் பெரிதும் வேறுபடும்.

*ஏற்றுக் கொள்ளவும்.* தனித்து வாழும் பெண்கள் அனைவரும் பணி (உழைக்கும்) செய்யும் பெண்கள். பாதுகாப்பான பொது இடங்கள், பணி இடங்கள், மற்றும் போக்குவரத்துக்கு ஏற்ற சூழலை உருவாக்க வேண்டும். சட்டத்தின் ஆட்சியின் மூலமாகவும் அரசு அமைப்புகளின் ஆதரவு மூலமாகவும், அவர்கள் அவர்களது

வருமானத்தின் மீது கட்டுப்பாடு செலுத்துவதற்கு ஏற்ற சூழலை ஏற்படுத்த வேண்டும். அரசு ஆதரவுடன் வேலைவாய்ப்புகள் வழங்குவதன் மூலமாக, தொழில் திறனுக்கு ஏற்ற 'குறைந்தபட்ச ஊதியத்தை' நேரடியாக வங்கிக் கணக்கில் செலுத்துவதன் வாயிலாக, அல்லது 'ஈட்டுகின்ற வருமானத்துக்கும்' மாநிலத்தில் கண்ணியமாக வாழ்வதற்கு வேண்டிய ஊதியத்துக்கும் இடையிலான வித்தியாசத்தை நிரப்பும் வகையிலான நிதி உதவி மூலமாக, வாழ்க்கைத் தரத்துக்கு உதவக்கூடிய ஒரு வருமானம் உறுதி செய்யப்பட வேண்டும்.

*முன்னுரிமை* அளிக்கவும். தனித்து வாழும் பெண்களுக்கு நியாயமான ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்புகள் அளிக்க, அரசின் சமூகப் பாதுகாப்பு அமைப்பின் பயன்கள் கிடைக்க வேண்டும். பணியிடங்களிலும் குடியிருப்புப் பகுதிகளிலும் பாதுகாப்பிற்காக, அரசு ஆதரவுடன் செயல்படும் விடுதிகள் தேவை. அவர்களின் திட்டவட்டமான தேவைகளுக்கு ஏற்ப அரசின் சமூகப் பாதுகாப்பு அமைப்பும், திட்டங்களும், விதிகளும் வடிவமைக்கப்பட வேண்டும். இயன்ற அளவுக்கு தடைகளைப் போடுவதற்குப் பதிலாக, மதிக்கத்தக வாழ்க்கை தருவதற்கு ஏற்றதாக சமவாய்ப்பு அளிப்பதாக அரசின் ஆதரவு இருக்க வேண்டும்.

*வடிவமைக்கவும்.* தனித்து வாழும் பெண்களுக்காக திட்டவட்டமான இடையீடுகள் அவர்கள் சொந்தக் காலில் நிற்க முடியுமாறு இருக்க வேண்டும். சுதந்திரமான தற்-சார்பு உணர்வுமிக்க தனிநபர்களுக்கு ஏற்ற சூழலை உருவாக்க முன்னுரிமை தர வேண்டும். நல உதவிகள் தேவைப்படும் நபர்களுக்கு உடனடியாகவும் இடர்ப்பாடுகள் இல்லாமலும் கிடைக்க வேண்டும்.

# தனித்து வாழும் பெண்களுக்கான கோரிக்கை சாசனம்

8 மார்ச் 2023

தனித்து வாழும் அனைத்து பெண்களுக்கும் கண்ணியமான வாழ்க்கை வாழ்வதற்கான சூழ்நிலை அமைய வேண்டும் என்று நாங்கள் கோருகிறோம்.

தற்சார்பு மற்றும் சுயமாகச் செயல்படும் ஆற்றலைத் தடுக்கும் சமூகக் கட்டமைப்புகள் மற்றும் நிறுவனத் தடைகளை *படிப்படியாக மாற்றியமைக்க வேண்டும்.*

'தனித்து வாழும் பெண்களின்' பல்வேறு தேவைகளை *அங்கீகரித்து* அவர்கள் சட்டம் உட்பட, குடும்பம், சமூகம் மற்றும் அரசின் மீது சார்ந்திருப்பதைக் குறைப்பதற்கு அவர்களின் சுயசார்புக்கான சூழலை உருவாக்குவதற்கு கொள்கை அளவில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும்.

'தனித்து வாழும்' பெண்கள் வெவ்வேறு வழிகளில் *'தனிமையை' அனுபவிக்கிறார்கள்,* மேலும் அரசின் வழிமுறைகள் வெவ்வேறு வகையில் தனித்து வாழும் பெண்களின் குறிப்பிட்ட தேவைகளை நிவர்த்தி செய்ய வேண்டும்:

1) விதவைகளுக்கு பொருளாதார சுதந்திரம் மற்றும் பாதுகாப்பு போன்றவை தேவை.
2) (சாதி, மதம் தொடர்பான) வெறுப்புக் குற்றங்களில் விதவைகளுக்கு கூடுதல் சமூக-பொருளாதார மறுவாழ்வு தேவை.
3) ஆசிட் வீச்சில் இருந்து தப்பியவர்கள், தங்கள் உளவியல்-சமூக நல்வாழ்வுக்கு வாழ்நாள் முழுவதும் ஆதரவு தேவை.
4) பிரிந்து வாழ்பவர்கள், விவாகரத்து செய்தவர்கள், திருமணம் செய்யாத பெண்கள் ஆகியவர்களுக்கும் சமூக-பொருளாதார மறுவாழ்வு தேவை.
5) குறைபாடுகள் உள்ள பெண்கள், குறிப்பாக குடும்பம் இல்லாத பெண்கள் (பிற்கால வாழ்க்கையில் மிகவும் கடுமையாக இருக்கும் என்பதால்) அவர்களுக்குப் பராமரிப்பாளர்கள் தேவை.
6) மீனவப் பெண்கள், குறிப்பாக அவர்களின் கணவர் அயல்நாட்டுக்கு கப்பல் படையால் சிறப்படுத்தப்படும்போது அவர்களுக்கு சமூக-பொருளாதார பாதுகாப்பு தேவை.

7) தனித்து வாழும் பெண்கள் மத ரீதியிலான பாகுபாடு மற்றும் களங்கத்தை எதிர்கொள்ளும் போது அவர்களுக்கு சமூக-பொருளாதார பாதுகாப்பு தேவை.

தனித்து வாழும் பெண்களுக்கான தெளிவான உரிமைகளுடன் கூடிய, அவர்களின் பிரச்சினைகளில் கவனம் செலுத்தும் மற்றும் நிவர்த்தி செய்யும், சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள், மாநில அரசு அதிகாரிகள் பொறுப்பு மற்றும் அதனை வழங்கும் வழிமுறைகள்[1] குறித்த *சட்டத்தை செயல்படுத்த* வேண்டும்; இந்திய அரசியலமைப்பின் 39A பிரிவின் கீழ் சிறப்பு கவனம் தேவைப்படும் வகையாக தனித்து வாழும் பெண்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

நிலம், அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் மற்றும் பணப்புழக்கம் ஆகியவற்றின் நிதி மற்றும் பரம்பரை உரிமைகள் உட்பட அனைத்து கனிக்கப்படவேண்டிய உரிமைகளுடன், தனித்து வாழும் பெண்களை *சட்டப்பூர்வ குடும்பத் தலைவர்களாக* இந்த சட்டம் வெளிப்படையாக அங்கீகரிக்க வேண்டும்.

*இழப்பீடு மற்றும் பொறுப்புக்கான விரிவான விதிகளை* இந்த சட்டம் உள்ளடக்கியிருக்க வேண்டும், தேவைப்பட்டால், இந்த நோக்கத்திற்காக பிரத்தியேகமாக தனி விதிகளை உருவாக்க வேண்டும். சாதிக் கொடுமைகளில் கணவன் கொல்லப்படுவதாலும், ஆசிட் வீச்சால் உடலின் பாகங்கள் சிதைவடைவதாலும் பல பெண்கள் 'தனித்து' வாழ்கிறார்கள். இழந்த வாய்ப்பு, மனஅதிர்ச்சி, வாழ்நாள் மருத்துவ பராமரிப்பு, தலைமுறைகளுக்கு இடையேயான செலவு மற்றும் தண்டனைக்குரிய சேதங்களுக்கு குற்றவாளியை பொறுப்பேற்க செய்ய வேண்டும். அரசால் வரி வருவாயைப் பயன்படுத்தி வழங்கப்படும் ' இழப்பீடு ஆறுதல்தொகை', கருணைத் தொகை, நிவாரணம் மற்றும் மறுவாழ்வுக்கான தற்போதைய முறை, ஒரு முக்கியமான உடனடி முதலடி என்றாலும் அது 'போதுமானதாக இல்லை. விகிதாச்சார பொருளாதார சேதங்களின் அடிப்படையில் தனிப்பட்ட பொறுப்புடன் குற்றவாளியை பொறுப்பேற்கச் செய்ய வேண்டும்.

*நிர்வாக உணர்திறன்*

தனித்து வாழும் பெண்கள் தங்களுக்கும் தங்களைச் சார்ந்தவர்ளுக்கும் சமூக, பொருளாதார மற்றும் சட்டரீதியான பல தடைகளை எதிர்கொண்டபோதிலும்

[1] Article 15(3) provides the state the power to make any special provision for women and children.

உதவி செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். பெரும்பாலான தடைகள் நிர்வாக மற்றும் அதிகாரத்துவமானவை எனினும் அவைகளை எளிதில் அகற்ற முடியும். ஆனால் வாழ்க்கைத் துணை இறந்துவிட்ட நிலையிலும், பிற பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலைகளிலும் பெரும்பாலும் தவறானவர்கள் என்ற முறையில் அவமானப்படுத்தி நிராகரிக்கப்படுகிறார்கள், இவை தற்போது இருக்கும் அரசு அமைப்புகளின் உள்ளார்ந்த பண்பாக இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும்.

*தனித்து வாழும் பெண்களின் குறிப்பிட்ட தேவைகளை அரசு உணர்ந்திருக்க வேண்டும்.* தனித்து வாழும் பெண்ணுக்கு தர வேண்டிய அடையாள அட்டைகள் மற்றும் பிற ஆவணங்கள் (எ.கா: விதவைச் சான்றிதழ்), அந்தப் பெண்ணின் வழக்கமான வசிப்பிடத்திலொ அல்லது அருகிலுள்ள அரசு அலுவலகத்திலோ தகுதிவாய்ந்த அதிகாரியால் வழங்கப்பட வேண்டும்.

வெளிப்படையான அளவுகோல்களின் அடிப்படையில் அடையாள அட்டைகள் வழங்குவது *தானாக நடைபெறுவதாக இருக்க வேண்டும்.* உதாரணமாக, ஒரு குறிப்பிட்ட வயதுக்கு மேற்பட்ட திருமணமாகாத பெண்கள் அல்லது விதவைகள் திருமணச் சான்றிதழ் மற்றும் கணவரின் இறப்புச் சான்றிதழை சமர்ப்பித்தவுடன் அவை வழங்கப்பட வேண்டும். தேவையான ஆவணங்கள் இல்லாதவர்களுக்கு மட்டுமே சரிபார்ப்பு இருக்க வேண்டும்.

அவை தானாகவே வழங்கப்படலாம்:

1) விவாகரத்தான பெண்கள் - விவாகரத்து வழங்கப்பட்டதும்.
2) விதவைப் பெண்கள் - வாழ்க்கைத் துணை இறந்த உடனேயே.
3) பிரித்து விடப்பட்ட பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட, ஒதுக்கப்பட்ட பெண்கள் - குறைந்தது கணவனைப் பிரிந்த ஒரு வருடத்திற்குள்
4) காணாமல் போன வாழ்க்கைத் துணையைக் கொண்ட பெண்கள் - காணாமல் போன நபர் புகாரைப் பதிவு செய்த ஒரு வருடத்திற்குள்.
5) திருமணமாகாத பெண்கள் - 30 வயதுக்கு மேல்.

தனித்து வாழும் பெண்கள் அனைத்து வகையிலும் குடும்பத் தலைவிகளாக *சட்டப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.* நிலம் மற்றும் வீட்டுப் பட்டாக்களின் முதல் உரிமையாளராகவும் அவர்கள் இருக்க வேண்டும்.

*பெண்ணின் பெயரில் அதிகாரப்பூர்வ ஆவணங்கள் இருக்க வேண்டும்.* அனைத்து அரசு ஆவணங்களும் தனித்து வாழும் பெண்களுக்கு அவர்களின் பெயரில் மட்டுமே கிடைக்க வழிவகை செய்ய வேண்டும்.
100-நாள் வேலைத் திட்டத்திற்கான வேலை அட்டைகள் தனியாகவும், பிரத்தியேகமாகவும், தனித்து வாழும் பெண்களின் பெயர்களில் இருக்க வேண்டும்.

*வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதாரங்கள்*
தனித்து வாழும் பெண்கள் தங்களுக்கும் தங்களைச் சார்ந்தவர்களுக்கும் உதவி செய்ய வேண்டும் - இது அனைத்து தனித்து வாழும் பெண்களும் வேலை செய்யும் பெண்கள் என்ற உண்மை நிலைக்கு வழிவகுக்கும். திறன் மேம்பாடு, ஆட்சேர்ப்பு, பாதுகாப்பான போக்குவரத்து மற்றும் பணியிட பாதுகாப்பு தொடங்கி பொது இடங்கள், குழந்தை பராமரிப்பு மற்றும் குறைகளை நிவர்த்தி செய்யும் வழிமுறைகள் உள்ளிட்டவைகளை ஏற்படுத்தி அவர்களின் வேலைவாய்ப்புக்கு உகந்த சூழல் உருவாக்க வேண்டும்.

தொழில்முனைவு, கூட்டுறவுகள், வேலைவாய்ப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பு ஆகியவற்றின் மூலம் அனைத்து தனித்து வாழும் பெண்களும், வேலைவாய்ப்பில் தொடரும் பாகுபாடுகளுக்கு மத்தியில் பெண்களின் பொருளாதார சுயாட்சியைப் பெறவும், குடும்பங்கள் மற்றும் சமூகங்களில் (மற்றும் அதற்கு அப்பால்) அவர்களின் வாதிடும் சக்தியை அதிகரிக்க எல்லொருக்குமான அடிப்படை மாதாந்திர வருமானம் உறுதி செய்ய வேண்டும். இது நலத் திட்டங்களுடன் இணைக்கப்பட்ட இடர்பாடுகள் மற்றும் களங்கத்தை அகற்றும், அத்துடன் சில நிபந்தனைக்குட்பட்ட பண பரிமாற்றங்களுக்கு (முதியோர் ஓய்வூதியம் போன்றவை) ஆவணப்படுத்தப்பட்ட தந்தைவழி மற்றும் சில நேரங்களில் கட்டாய அமலாக்க நடைமுறைகளைத் தவிர்க்கும்.

*பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு:* தனித்து வாழும் பெண்களுக்கு பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டிற்காக பிரத்யேகமாக புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும்.

*தனித்து வாழும் பெண்களுக்கான வேலைவாய்ப்பு* (வேலைவாய்ப்பு மற்றும் ஆட்சேர்ப்பு) மற்றும் தொழில் முனைவோர் வாய்ப்புகளுக்காக பிரத்யேக

வேலைவாய்ப்பு முகாம்கள் மற்றும் வர்த்தக கண்காட்சிகள் நடத்தப்பட வேண்டும்.

தனித்து வாழும் பெண்களின் *வேலைவாய்ப்பை ஊக்குவித்தல்,* இதன் மூலம் அவர்கள் தற்சார்புடையவர்களாகவும், அவர்களின் குறிப்பிட்ட தனிப்பட்ட தேவைகளை அரசால் சாத்தியமில்லாத அளவு கவனித்துக்கொள்ளவும் முடியும். அரசு இடைவெளியை நிரப்பினாலே, கருவூல நிதியைப் பயன்படுத்துவதை மேம்படுத்த முடியும்.

*அரசுப் பணிகளில் சமவாய்ப்பை உறுதி செய்தல்:* தனித்து வாழும் பெண்களுக்கு சமவாய்ப்பை உறுதி செய்து, நிர்வாகத்தின் அனைத்து நிலைகளிலும், குறிப்பாக முன்னணித் துறைகள் மற்றும் பதவிகளிலும், முடிவெடுக்கும் மட்டங்களிலும்[2]. அவர்களை நியமிக்க வேண்டும். அரசு நிறுவனங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் (MGNREGS) உள்ளிட்ட அனைத்து அரசுப் பணிகளிலும் பெண்கள் 50% இருக்க வேண்டும். இந்த 50%-க்குள், தனித்து வாழும் பெண்கள் முன்னுரிமையாக சேர்க்கப்பட வேண்டும், இதில் கொடூரமான குற்றங்களில் இருந்து தப்பிய தனித்து வாழும் பெண்களுக்கு முதல் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

மாநில அரசின் நிதியுதவியுடன் *தனித்து வாழும் மகளிர் கூட்டுறவு சங்கங்களை ஏற்படுத்த வேண்டும்.* இத்தகைய கூட்டுறவுச் சங்கங்கள்[3] மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்களில் குறிப்பிட்ட சதவீதத்தை அரசு கொள்முதல் செய்வதை உறுதி செய்ய வேண்டும்.

*மகளிர் வங்கியை*[4] *நிறுவுவதன் மூலம்* தேவைப்படும் பெண்களுக்கு நிறுவன கடன் அணுகல் மற்றும் கிடைக்கும் தன்மையை மேம்படுத்த, தாமதமின்றி மகளிர் வங்கியை நிறுவுதல். (வாழ்ந்து காட்டு பெண்ணே)'.[5]

*முன்னுரிமை அடிப்படையிலான கடன்கள், மற்றும் கடன் உதவி:* தனித்து வாழும் பெண்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் மானியங்களுடன் பிணையற்ற கடன்கள் வழங்கப்பட வேண்டும். ஆண் குடும்ப உறுப்பினர்கள் (குறிப்பாக

2. Article 16 provides for equality of opportunity in matters of public employment.
3. Article 43B deals with promotion of co-operative societies by the state.
4. Article 38(2) provides that the state shall strive to minimise the inequalities in income, and endeavour to eliminate inequalities in status, facilities, and opportunities,
5. Point 8 of the core objectives of the Tamil Nadu State Policy for Women, 2021 (Draft).

கணவர், சகோதரர், தந்தை மற்றும் சில நேரங்களில் மாமனார் அல்லது மாமா) அனுமதியின்றி பெண்களுக்கு கடன் வழங்கப்படுவதில்லை என்ற தற்போதைய நடைமுறை சட்டவிரோதமாக்கப்பட வேண்டும்.

*குறிப்பிட்ட நலத் திட்டங்கள்*

தனித்து வாழும் பெண்களை சமூகத்தில் ஒருங்கிணைக்கும் வகையில் சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் வடிவமைக்கப்பட வேண்டும். பெரும்பாலான நலத் திட்டங்கள் தனித்து வாழும் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்களின் - வளங்களுக்கான அணுகலைத் தடுக்கும் அமைப்பு ரீதியான தடைகள் (பொருளாதார மற்றும் வேலைவாய்ப்பு வளங்கள் உட்பட) மூல காரணத்தை அடையாளம் கண்டு நிவர்த்தி செய்யத் தவறிவிடுகின்றன. கிராம மேம்பாடு மற்றும் பாதுகாப்புத் திட்டங்கள் உட்பட அனைத்து வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் நலத் திட்டங்கள் (குறிப்பாக சமூகம் சார்ந்தவை) தனித்து வாழும் பெண்களுக்கான வெளிப்படையான ஏற்பாடுகளைக் கொண்டிருக்க வேண்டும், தனித்து வாழும் பெண்களாக அவர்கள் எதிர்கொள்ளும் தனித்துவமான பிரச்சினைகளை நிவர்த்தி செய்ய வேண்டும்.

*குடும்பத்தை மறுவரையறை செய்தல்:* சமூகப் பாதுகாப்பு மற்றும் உரிமைகளைப் பெறும் நோக்கத்திற்காக, தன்னைச் சார்ந்திருக்கும் அனைத்து தனித்து வாழும் பெண்களையும் 'பெண் தலைமைத்துவக் குடும்பங்கள்' என்று கருதப்பட வேண்டும்.

குறைந்தபட்ச அடிப்படைத் தேவைகளுக்கு அப்பாற்பட்ட வரையறுக்கப்பட்ட வாழ்க்கைத் தரத்தைப் பூர்த்தி செய்ய நலத் திட்டங்கள் பெறுநருக்கு உதவுகின்றன என்பதை உறுதிசெய்ய வேண்டும். மாதாந்திர ஓய்வூதியத்தை மற்ற அரசு திட்டங்களைப் போலவே ₹5,000+ பொருந்தக்கூடிய அகவிலைப்படியாக ஒரே மாதிரியாக உயர்த்த வேண்டும்.[6,7]

---

6. Socio-economic rehabilitation; Annexure 1, Schedule, Rule 12(4), The Scheduled Castes and the Scheduled Tribes (Prevention of Atrocities) Rules 1995, as amended to date; It is also the minimum pension for a retired government employee.
7. The pension schemes by the union government such as the Indira Gandhi National Widow Pension Scheme and Indira Gandhi National Old Age Pension Scheme, or the pension schemes by the state government – which include categories of single women such as destitute widows, deserted wives, and unmarried poor women above the age of 50 – all provide ₹1000 (or less) per month. This arbitrarily fixed amount fails to describe what (basic) needs/ requirements it defrays. Furthermore, there exists no uniform system for calculating a fixed pension amount.

விதவைகள் மற்றும் ஆதரவற்ற மகளிர்[8] நல வாரியத்தை *ஒற்றைச் சாளரமாக மாற்றி*, தனித்து வாழும் பெண்களுக்கான அனைத்துத் திட்டங்களுக்கும் ஒரே சாளரமாக மாற்றுதல், அது தொடர்பான அனைத்துத் திட்டங்கள் குறித்த தகவல்களை வழங்குதல், விதவை சான்றிதழ்கள், தனித்து வாழும் பெண்களுக்கான அடையாள அட்டைகள் போன்ற அனைத்து ஆவணங்களையும் சமர்ப்பித்தல்; மற்றும் ஓய்வூதியம், திறன் பயிற்சி போன்ற தனித்து வாழும் பெண்களுக்கான திட்டங்களைக் கிடைக்கச் செய்தல்.

*பெண்களுக்கான அனைத்து திட்டங்களிலும் தனித்து வாழும் பெண்களுக்கு முன்னுரிமை:* புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் (NEEDS) போன்ற பல திட்டங்களின் கீழ் பெண்கள் 'சிறப்பு தொழில்முனைவோர்' பிரிவின் கீழ் கருதப்படுகிறார்கள் மற்றும் பெண்களுக்கு 50% இடஒதுக்கீடு வழங்கப்படும் (ஆதரவற்ற விதவைகள் / விவாகரத்தானவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்). ஏழை, எளிய பெண்கள், மாற்றுத் திறனாளிகள் திருநங்கைகள், பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள், ஆதரவற்ற பெண்கள் என அனைத்துத் திட்டங்களிலும் இதேபோன்ற முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

*நலத்திட்டங்கள் பரஸ்பரம் தனித்துவமாக இருக்கக் கூடாது.* ஒரு திட்டத்தை அணுகுவது மற்றொரு திட்டத்தின் நன்மைகளைப் பெறுவதைத் தடுக்கக்கூடாது. எடுத்துக்காட்டாக, குறைபாடுள்ள தனித்து வாழும் பெண்களுக்கு மற்ற தனித்து வாழும் பெண்களை விட அதிக உதவி தேவைப்படுகிறது.

தனித்து வாழும் பெண்கள் சமூக நலத் திட்டங்களில் பயன்பெற உதவும் வகையில் கட்டணமில்லா தொலைபேசி எண்ணுடன் கூடிய கால் சென்டர் அமைக்க வேண்டும். இது அனைத்து தனித்து வாழும் பெண்களுக்கும் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல் சேவைகளை வழங்க வேண்டும். கால் சென்டர் வாரத்தில் குறைந்தது ஆறு நாட்களாவது காலை 8 மணி முதல் இரவு 7 மணி வரை வழக்கமான வேலை நேரத்துடன் செயல்பட வேண்டும்.

*ஆரோக்கியம்*

தனித்து வாழும் பெண்களுக்கு அவர்களின் தேவைகளுக்கு ஏற்ப குறிப்பிட்ட உடல்நல மற்றும் மனநல பராமரிப்பு தேவைப்படுகிறது. இது உதவியாளர்களை வழங்குவதை உள்ளடக்கியது.

---

8. vide G.O.(Ms) No.56, SW & WE Dept dated: 02.09.2022.

இலவச, தரமான சுகாதார சேவைகள், குறிப்பாக பிரசவத்தின் போது. இதில் உடல் மற்றும் மன ஆரோக்கியம்[9] அடங்கும்.

தனித்து வாழும் பெண் மற்றும் / அல்லது அவரைச் சார்ந்தவர்களுக்குத் தேவையான அனைத்து மருத்துவ நடைமுறைகளையும் உள்ளடக்கிய இலவச விரிவான சுகாதார காப்பீடு - பிரசவம் உட்பட, அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் மருத்துவமனைகளிலும் செல்லுபடியாக வேண்டும்.

தனித்து வாழும் பெண்கள் மற்றும் அவர்களைச் சார்ந்திருப்பவர்களுக்கு (குறிப்பாக குழந்தைகள்) சிறப்பு அணுகலைக் கொண்ட மாவட்ட மனநல ஆலோசனை வாரியங்கள் இருக்க வேண்டும்.

*கல்வி*

அரசு/அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் தனித்து வாழும் பெண்களுக்கும், அவர்களது குழந்தைகளுக்கும் பட்டப்படிப்பு வரை (திருமணம் அல்லது மறுமணத்திற்கு எந்த தடையும் இல்லாமல்) இலவச முறையான கல்வி வழங்கப்பட வேண்டும்.

*கவனம் மற்றும் பாதுகாப்பு*

தனித்து வாழும் பெண்களின் பாதுகாப்பை முன்னுரிமை அடிப்படையில் உறுதி செய்ய வேண்டும். இதில் உடல் மற்றும் உணர்வு பாதுகாப்பு மட்டுமல்லாமல் உளவியல் கவனம் மற்றும் பாதுகாப்பும் அடங்கும். தற்சார்புக்கு பல தடைகள் உள்ளன, அவற்றில் பாதுகாப்பான இடங்களை மறுப்பது - குடியிருப்பு வளாகங்கள் மிக முக்கியமானவை. ஏற்கனவே உள்ள சமூக கட்டுப்பாடுகள் பல வேலை வாய்ப்புகளையும் அடிப்படை பொழுதுபோக்குகளையும் கைவிட கட்டாயப்படுத்துகின்றன. பாதுகாப்பான இடங்கள் மற்றும் பாதுகாப்பு தேவைப்பட்டாலும், இந்த குடியிருப்புகள் பெயரளவில் சிறைச்சாலைகளாக மாறாமல் இருக்க, அவற்றை அதிகாரமளிக்கும் சூழலுடன் சமநிலைப்படுத்துவதில் அதிக உணர்திறன் தேவைப்படுகிறது.

*பணிபுரியும் தனித்து வாழும் பெண்களுக்கான விடுதிகள்:* பணிபுரியும் மகளிர் விடுதிகளின் எண்ணிக்கையை மாவட்டத்திற்கு குறைந்தபட்சம் 3 ஆக உயர்த்த வேண்டும், அத்தகைய விடுதிகளில் குறைந்தபட்சம் 50% தனித்து

9. Article 47 states the duty of the State to raise the level of nutrition and the standard of living and to improve public health.

வாழும் பெண்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும். சென்னையில் மாத வருமானம் ரூ.35,000 வரையிலும், மற்ற இடங்களில் மாதம் ரூ.25,000 வரையிலும் பொருளாதார தகுதி வரம்புகளை[10] மாற்ற வேண்டும். தார்மீகக் காவல்துறையைத் தவிர்க்கவும், வேலைத் தேவைகளைப் பொறுத்து நெகிழ்வான நேரங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

*ஒவ்வொரு மாவட்டத்திலும் தனித்து வாழும் பெண்களுக்கான தங்குமிடங்கள்:* தமிழகத்தில் தற்போது 34 சேவை மையங்கள் உள்ளன, இது குறைந்தது 4 மாவட்டங்களில் ஒரு தங்குமிடம் கூட இல்லை என்பதைக் குறிக்கிறது. காப்பகங்களின் எண்ணிக்கையை மாவட்டத்திற்கு குறைந்தது 2 ஆக உயர்த்த வேண்டும், அத்துடன் ஒரு தங்குமிடத்திற்கு தங்குபவர்களின் எண்ணிக்கையையும் அதிகரிக்க வேண்டும். தங்குமிடம் வழங்கப்படும் நாட்களின் எண்ணிக்கையை 5 நாட்களில் இருந்து 30 நாட்களாக.[11] அதிகரிக்க வேண்டும். தனித்து வாழும் பெண்களின் அனைத்து குழந்தைகளையும் (15 வயது வரையிலான சிறுவர்கள் மற்றும் 18 வயது வரையிலான சிறுமிகள்) காப்பகங்களில்[12] அனுமதிக்க வேண்டும்.

*நிரந்தர தங்குமிடங்கள்:* அனைத்து தனித்து வாழும் பெண்களுக்கும்[13] அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் வீட்டுவசதி / தங்குமிடத்தை உறுதி செய்ய வேண்டும். தனித்து வாழும் பெண்களுக்கான விடுதிகள் மற்றும் தங்குமிடங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், அங்கு தங்கியுள்ள அனைவருக்கும் அனைத்து தேவைகளும் (உணவு மற்றும் தங்குமிடம் மட்டுமல்ல) கிடைப்பதை உறுதி செய்யவும்.

தனித்து வாழும் பெண்களை (சமூகத்திற்குள்ளும், வெளியேயும்) சமூக விலக்கல் மற்றும் புறக்கணிப்புகளை பொருளாதார மற்றும் சமூக வன்முறையின் ஒரு வடிவமாக அங்கீகரிக்கவும்.

9. Article 47 states the duty of the State to raise the level of nutrition and the standard of living and to improve public health.

10. The Tamil Nadu government currently runs 28 working women's hostels, and approved 14 more.

11. The one stop centres provide temporary shelter for a maximum of five days to women in need, along with their children.

12. Currently girls of all ages and boys up to 8 years of age may stay with their mothers.

13. Currently, 36 Swadhar Grih/Short Stay Homes with a capacity of 1080, are run by NGOs in Tamil Nadu (financed 60:40 by the union and state governments) to provide shelter, food, clothing, counselling, training, medical support and legal aid to women in difficult circumstances. Each home can accommodate 30 women along with girls till the age of 18 and boys till the age of 12 years. The women can stay up to five years, and women above 60 years of age are shifted to old age homes.

குற்றவியல் நடைமுறைச் சட்டம் 1973 மற்றும் பாலின அடிப்படையிலான மற்றும் குடும்ப வன்முறையிலிருந்து தப்பிய தனித்து வாழும் பெண்களுக்கு சிறப்பு உள்ளூர் சட்டங்களின் (எஸ்.எல்.எல்) கீழ் உடனடி மற்றும் விரிவான மறுவாழ்வு மற்றும் இழப்பீடு வழங்க வேண்டும்.

சிவில் சமூக அமைப்புக்களுடன் இணைந்து அரசால் தனித்து வாழும் பெண்களுக்கான மறுவாழ்வு சூழலை ஏற்படுத்த வேண்டும்.

**காவல்துறை மற்றும் சட்ட அமுலாக்கல்**

தனித்து வாழும் பெண்களின் தன்னம்பிக்கை மற்றும் சுதந்திரத்திற்கு அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களை அறிந்து உணர்திறன் கொண்ட அரசு நிர்வாகமுறைகள் இன்றியமையாதவை. நீதி வழங்குவதிலும், பாதுகாப்பிலும் நீதித்துறையை விடக் காவல்துறைதான் பெரும்பாலும் இறுதி எல்லையாக இருக்கிறது. இன்று நடைமுறையில் இருக்கும் நிர்வாகமுறை அந்த நோக்கத்திற்கு ஏற்றதாக இல்லை, மேலும் அது பெரும்பாலும் பெண்களுக்கு எதிரான குற்றங்களை அடிக்கடி சிறுமைப்படுத்துகிறது. பின்தொடர்தல் (திருமணமாகாத மற்றும் மணமாகி பிரிந்தவர்கள் உட்பட) ஆசிட் தாக்குதல்கள், உடல் உறுப்புகளைச் சிதைப்பது மற்றும் கொலை போன்ற மிகவும் கொடூரமான குற்றங்கள் அடிக்கடி நடக்கிறது, ஆனால் இவை கிட்டத்தட்ட ஒருபோதும் பதிவு செய்யப்படவில்லை. பலாத்கார வழக்குகள், கற்பழிப்பு முயற்சி, ஆடைகளை அவிழ்த்தல் மற்றும் பெண்களுக்கு எதிரான பிற குற்றங்களின் பதிவு செய்யப்பட்ட வழக்குகளுக்கு இடையிலான இடைவெளி காவல்துறையின் மீதான அவநம்பிக்கை மற்றும் பெண்களுக்கு எதிரான குற்றங்களைப் பதிவு செய்வதை (முடிந்தால்) மற்றும் அற்பமாக்குதல் (ஒடுக்க முடியாதபோது) ஆகியவற்றின் சான்றுகளாகும்.

காவல்துறை மற்றும் அனைத்து சட்ட அமலாக்கங்களுக்கும் *நிலையான செயல்பாட்டு நடைமுறைகள் வரைவு,* கிடைக்கக்கூடிய அனைத்து சட்டங்கள், வழக்குச் சட்டங்கள், நல்ல நடைமுறைகள் மற்றும் தனித்து வாழும் பெண்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளைக் கையாள்வதற்கான சட்ட நடைமுறைகளை ஒருங்கிணைத்தல்.

உலகளாவிய அளவில் மனித உரிமை தரங்களை நிர்ணயித்த மனித உரிமைகள் சட்டம், பெண்களுக்கு எதிரான அனைத்து பாகுபாடுகளையும்

ஒழிப்பதற்கான உடன்படிக்கை (CEDAW), மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனத்தின் (UDHR) மனித உரிமைகளின் சர்வதேச தரநிலைகள், சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கை (ICCPR), சமூக, பொருளாதார மற்றும் கலாச்சார உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கை (ICESCR), மற்றும் பெண்களின் அரசியல் உரிமைகள் பற்றிய மாநாடு (இவை அனைத்திலும் இந்தியா ஏற்றுக்கொண்டு கையெழுத்திட்டுள்ளது) ஆகியவற்றின் அடிப்படையில் பாலின விஷயங்களை கையாளும் அனைத்து சட்ட அமலாக்க துறைகளை தனித்து வாழும் பெண்களின் உரிமைகள் குறித்து *கவனம் செலுத்தச்செய்ய வேண்டும்.* குறிப்பாகத் தனித்து வாழும் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் மற்றும் அவற்றை எவ்வாறு கையாளலாம் என்பது குறித்து காவல் துறையினருக்குக் கற்பிக்க வேண்டும்.

பூஜ்யம் எஃப்ஐஆரி-ன் உரிமையை மனதில் வைத்து, தனித்து வாழும் பெண்கள் அளிக்கும் *புகார்களை உடனடியாக முதல் தகவல் அறிக்கையாக (எஃப்ஐஆர்)* பதிவுசெய்து, காவல்துறை தனது சொந்த விருப்புரிமைகள் எதுவும் செலுத்தப்படவில்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும். பதிவு செய்யப்பட்ட அனைத்து வழக்குகளிலும் இந்திய தண்டனைச் சட்டம், 1860 (IPC) மற்றும் சிறப்பு உள்ளூர் சட்டங்கள் (SLL), பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம், 1989 போன்றவற்றின் குறிப்புகள் இருக்க வேண்டும். ஒரு பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியைச் சேர்ந்த பெண் புகார் அளித்தால் அதிகக் கவனம் செலுத்த வேண்டும்.

வழக்குகளைப் பதிவு செய்ய மறுக்கும் அல்லது புகார்தாரர்களை துன்புறுத்த அல்லது அவமரியாதை செய்யும் காவல்துறையினருக்கு எதிராக உடனடியாக *ஒழுங்கு மற்றும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

*விசாரணையும், குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதும் காலதாமதமின்றி,* குறித்த காலத்திற்குள் இருக்க வேண்டும். தனித்து வாழும் பெண்கள் தாக்கல் செய்யும் அனைத்து குற்ற வழக்குகளுக்கும் புகார்தாரருக்கு ஒரு தொடர்பு அதிகாரியை நியமிக்க வேண்டும்.

கலாச்சாரம், பாரம்பரியம் அல்லது மதம் என்ற போர்வையில் தனித்து வாழும் பெண்களைத் துன்புறுத்தும் உறவினர்கள் மற்றும் பிற சமூக உறுப்பினர்களுக்கு எதிராகக் *கடுமையான கொள்கையைப் பின்பற்ற வேண்டும்.*

பெண்களின் பாதுகாப்பிற்காகப் பெண் பணியாளர்களைக் கொண்ட *கண்காணிப்புக் குழுக்களை அமைத்தல்* - தனித்து வாழும் பெண்கள்மீது சிறப்பு கவனம் செலுத்துதல் - மற்றும் பாலின அடிப்படையிலான குற்றங்களுக்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகளை எடுக்க, தனித்து வாழும் பெண்களின் குழுக்கள் அதிகமாக வசிக்கும் பகுதிகளில் கண்காணிப்பு ரோந்துகளை மேற்கொள்ள வேண்டும்.

**ஒரு பெண்ணிய நீதித்துறை**

நீதித்துறை என்பது தனித்து வாழும் பெண்களுக்கான கடைசி முயற்சியாகும், அவர்களில் பெரும்பாலோர் வழக்கறிஞர்களின் கட்டணம், வழக்குச் செலவுகள் முதல் தாமதங்கள் வரை ஏற்க முடியாது –. எனவே, உச்ச நீதிமன்ற நீதிபதிடி ஒய் சந்திரசூடின் மாற்ற முடியாத வார்த்தைகளில், அனைத்து நீதிமன்றங்களும் சட்டத்தைக் கையாளும் விதத்தில் *பெண்ணிய சிந்தனையை இணைக்க வேண்டும்* என்பது கட்டாயமாகும்.

அனைத்து நீதிமன்றங்களுக்கும், குறிப்பாகக் குடும்ப நீதிமன்றங்களுக்கான வரைவு *நிலையான செயல்பாட்டு நடைமுறைகள்*, கிடைக்கக்கூடிய அனைத்து சட்டங்கள், வழக்குச் சட்டங்கள், நல்ல நடைமுறைகள் மற்றும் தனித்து வாழும் பெண்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளைக் கையாள்வதற்கான சட்ட நடைமுறைகளை ஒருங்கிணைக்க வேண்டும். நீதிபதி, எழுத்தர் மற்றும் பிற நீதிமன்ற ஊழியர்கள் உட்பட அனைத்து தொடர்புடைய பணியாளர்களுக்கான நடத்தை நெறிமுறையும் இதில் அடங்கும். தனித்து வாழும் தாய்மார்கள் தொடர்பான நெறிமுறைகள் மற்றும் நடைமுறைகளுக்குச் சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும்.

தனித்து வாழும் பெண்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளில் செயலில், உடனடி மற்றும் குறித்த கால நடவடிக்கை. பாதிக்கப்பட்ட பெண் தனித்து வாழும் பெண்ணாக இருந்தால், அவசியமான பட்சத்தில் நீதிமன்றத்தில் அவள் நேரடியாக ஆஜராவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட வேண்டும். மேலும், பராமரிப்பு மற்றும் விவாகரத்து வழக்குகளின் தீர்ப்புகள் ஜீவனாம்சம் மற்றும் சொத்துக்கான உரிமைகள் தனித்து வாழும் பெண்களுக்கு முழுமையாகக் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.

*நீதிமன்றங்களில் குழந்தை நட்புச் சூழல்:* அனைத்து நீதிமன்றங்களும், குறிப்பாகக் குடும்ப நீதிமன்றங்கள் உட்பட, எந்தக் காரணத்திற்காகவும்,

நீதிமன்றத்தில் தனித்து வாழும் பெண்ணின் குழந்தை நேரடியாக ஆஜராவது தேவைப்படும்போது, குழந்தை நட்புச் சூழலை உறுதி செய்ய வேண்டும்.

தனித்து வாழும் பெண்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளில் (குறிப்பாகக் குடும்ப நீதிமன்றங்களில்) நடவடிக்கைகளைக் கண்காணிக்க போதுமான சிவில் மற்றும் நீதித்துறை அதிகாரங்களைக் கொண்ட *கண்காணிப்புக் குழுக்களை அமைக்க வேண்டும்.*

### சட்ட உதவி

சட்ட பணிகள் அதிகார அமைப்புகள் சட்டம் 1987-ன் பிரிவு 12(உ)-ன் படி, அனைத்து பெண்களுக்கும் இலவச சட்ட சேவைகளுக்கு உரிமை உண்டு. இதைத் தனித்து வாழும் பெண்களும் அணுகக்கூடியதாக இருக்க வேண்டும்.

சட்ட வசதிகளை அணுகும் நோக்கத்துடன், ஒவ்வொரு மாவட்டத்திலும் *சட்ட உதவி மையங்களின்* எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். தனித்து வாழும் பெண்கள் சம்பந்தப்பட்ட அனைத்து வழக்குகளும் முன்னுரிமையாகக் [14]கவனிக்கப்பட வேண்டும்.

மாவட்டத்தில் எந்த ஒரு தனித்து வாழும் பெண் புகார் அளித்தாலும் விசாரணையைத் தொடங்க *மாவட்டக் குழுக்களை அமைக்க வேண்டும்.*

பணியிடத்தில் பெண்களுக்கு ஏற்படும் பாலியல் துன்புறுத்தல் (தடுப்பு, தடை மற்றும் நிவர்த்தி) சட்டம், 2013-ன் கீழ் மாவட்ட அளவில் அமைக்கப்பட்டுள்ளதைப் போன்று ஒவ்வொரு ஊராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சிகளிலும் *உள்ளூர் புகார் குழுவை அமைத்து*, தனித்து வாழும் பெண்கள் மீதான வழக்குகளைச் சமாளிப்பதற்கான நிலையான செயல்பாட்டு நடைமுறைகளுடன் வலுப்படுத்தவும்.

### சமூக உள்ளடக்கம்

தனித்து வாழ்வது என்பது இயல்பானதாகவும், தனித்து வாழும் பெண்களை களங்கப்படுத்தாமலும் இருப்பது அவசரத் தேவையாக இருக்கிறது, இதன் மூலம் அவர்களை முழுமையாக உள்ளடக்குவதில் தடையாக இருக்கும் சமூக தடைகள், அவர்களை தவறாக பயன்படுத்தும், களங்கப்படுத்தும்.சமூக நடைமுறைகள் சட்டப்பூர்வமற்றவை என்று அறிவித்து மற்றும் அகற்றப்பட வேண்டும்.

14. Article 39A stipulates that the state must ensure that opportunities for securing justice are not denied to any citizen by reason of economic or other disabilities.

அனைத்து ஊடக விளம்பரங்கள், அறிவிப்புகள், விளம்பரப் பலகைகள் மற்றும் நாட்டுப்புறக் கலைஞர்கள் மூலம் தனித்து வாழும் பெண்கள் மற்றும் பொது மக்களுக்கான சமூக உள்ளடக்கம், அவர்களின் உரிமைகள் மற்றும் மாநில ஆதரவு வழிமுறைகள் குறித்து பிரச்சாரங்கள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும்.

தனித்து வாழும் பெண்களுக்கு, குறிப்பாக வயதான பெண்களுக்கு உணர்வுபூர்வமான மற்றும் உளவியல் ஆதரவை உறுதிப்படுத்த, தேவைகள் மற்றும் மதிப்பீடுகளின் அடிப்படையில் சமூக அடிப்படையிலான ஆதரவு அமைப்புகளை உருவாக்க வேண்டும். கிராம நூலகங்கள் மற்றும் சமூக மையங்கள் முதியோர்களுக்கான செயல்பாட்டு மையமாக இருக்க வேண்டும்.

தனித்து வாழும் பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் திட்டங்களுக்கான பொது-தனியார் கூட்டாண்மைகளைத் தொடங்குதல், மேலும் குடிமை சமூக அமைப்புகளுக்கு மற்றும்/அல்லது தனித்து வாழும் பெண்களுடன் பணிபுரிய நிதி மற்றும் பிற சலுகைகளை வழங்க வேண்டும்.

**நிதி**

நிதி ஆதாரங்களின் மீதான அணுகல், நன்மை மற்றும் கட்டுப்பாடு ஆகியவை தனித்து வாழும் பெண்களுக்கு வரையறுக்கப்பட்டுள்ளன அல்லது கிடையாது. இது தனித்து வாழும் பெண்களுக்கான சிறந்த மறுப்புகளில் ஒன்றாகும். தனித்து வாழும் பெண்கள் மற்றும் நிதி தொடர்பான சமூக சடங்குகள் மற்றும் நடைமுறைகள் - பொது, குடும்பம் மற்றும் தனிப்பட்ட முறையில் ஒரு விரிவான மறுசீரமைப்பு இருக்க வேண்டும். கூட்டுக் குடும்பங்களிலிருந்து தனிக் குடும்பங்களாகக் குடும்பம் மற்றும் குடும்பத்தின் பரிணாம வளர்ச்சியும், விருப்பத் திருமணங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதும் ஒப்புக்கொள்ளப்பட வேண்டும்.

*பொது நிதியானது,* தனித்து வாழும் பெண்களுக்கு (பெண்களுக்கான பட்ஜெட்டின் கீழ்) நலத்திட்டங்கள் மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்த போதுமான நிதியை ஒதுக்க வேண்டும். பாலின பட்ஜெட்டிற்குள் தனியாக ஒரு வரி அல்லது துணைத் திட்டம் தொடங்கப்பட வேண்டும்.

*இயல்பான வாரிசுரிமை:* தனித்து வாழும் பெண்கள் தன் கணவரின் முதன்மை சட்டப்பூர்வ வாரிசாக இயல்பாக இருக்க வேண்டும், உடனடி, தடையற்ற

உரிமை மற்றும் கூட்டுச் சேமிப்பிற்கான அணுகல் இருக்க வேண்டும். அவர்கள் தங்கள் மகனைச் சார்ந்திருப்பது நிரூபிக்கப்பட்டாலொழிய பெற்றோர் அல்லது பெரிய கூட்டுக்குடும்பத்தை இயல்பாகச் சேர்க்கக்கூடாது, செப்டம்பர் 29, 2022 தேதியிட்ட, கணவரின் தந்தையை வாரிசாகச் சேர்த்த ஆணை எண். 478 (வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை) திரும்பப் பெற வேண்டும்.

**கண்காணிப்பு மற்றும் பொறுப்புக் கூறல்**

*மாநிலத்தால் அவ்வப்போது தரவு சேகரிப்பு:* கால முறை மக்கள்தொகை கணக்கெடுப்புக்கு கூடுதலாக, தனித்து வாழும் பெண்களின் குறிப்பிட்ட கால புள்ளிவிவரங்களை சேகரிப்பது மாநில அரசின் பொறுப்பாகும். இந்தத் தரவு நிதி நிலை அறிக்கையில் உள்ள ஒரு தனி வரி மற்றும் தனித்து வாழும் பெண்களுக்கான பாலின துணைத் திட்டத்தின் அடிப்படையாக இருக்க வேண்டும்.

பெண்களின் பிரச்னைகளை விவாதிக்க *சிறப்பு கிராம சபைகளைக் கூட்ட வேண்டும்.* இந்தச் சிறப்பு கிராம சபையில், தனித்து வாழும் பெண்களின் தேவைகள் மற்றும் அவர்களுக்கான பட்ஜெட் ஒதுக்கீடுகள் மற்றும் செலவுகள் குறித்து ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி நிரல் இருக்க வேண்டும். இந்தக் கிராம சபையானது, கிராமத்தில் உள்ள தனித்து வாழும் பெண்களைக் கண்டறிந்து, அவர்களுக்குத் தேவையான ஆதரவை முன்மொழிய வேண்டும். ஏற்கனவே உள்ள திட்டங்கள் மற்றும் நலம்சார் நடவடிக்கைகள் அல்லது சிறப்புத் தனிப்பயனாக்கப்பட்ட திட்டங்கள் மூலம், நிர்வாகம் செயல்படுத்தலாம். மேலும், உள்ளாட்சி நிர்வாகத்தில் தனித்து வாழும் பெண்களின் இருப்பையும் பங்களிப்பையும்[15] உறுதி செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தனித்து வாழும் பெண்களைச் சமூக உள்ளடக்கத்திற்கு *மாவட்ட ஆட்சியர் பொறுப்பேற்க வேண்டும்,* மேலும் தனித்து வாழும் பெண்களுக்கான நலத்திட்டங்களை செயல்படுத்துவது குறித்து அவ்வப்போது ஆய்வு செய்ய வேண்டும். சமூக ஒதுக்குதலை குறைக்க மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

15. As per section 257 of The Tamil Nadu Panchayats Act 1994, the government may entrust to a panchayat such powers and responsibilities with respect to the preparation of plans for economic development and social justice in relation to the matters listed in Schedule IV. Point 25 of Schedule IV deals with women and child development.

பல்வேறு நடவடிக்கைகளைச் செயல்படுத்துவதன் செயல்திறனை மதிப்பாய்வு செய்ய *அவ்வப்போது ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும்.* இதனைத் தொடங்குவதற்கு, பின்வரும் ஆய்வுகள் நடத்தப்படலாம்:

- மாநிலத்தில் தனித்து வாழும் பெண்களை 'குடும்பமாக' அங்கீகரித்து, அவர்களின் பெயரில் குடும்ப அட்டைகளைப் பெறலாம் என்ற தமிழ்நாடு அரசின் அக்டோபர் 2021 ஆணை அமல்படுத்தப்பட்ட நிலை.
- தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்[16] கீழ் கூடுதலாக 50 வேலை நாட்கள் வழங்கப்பட்ட தனித்து வாழும் பெண்களின் எண்ணிக்கை.

பட்ஜெட் செலவினங்களின் *காலாண்டு மதிப்பீடுகள் செய்யப்பட வேண்டும்,* அதன் அறிக்கைகள் காலாண்டுக்கு ஒருமுறை பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்.

*வழக்கமான நிலை அறிக்கைகள்:* ஏப்ரல் மற்றும் அக்டோபர் மாதங்களில், மாவட்ட ஆட்சியர், மாவட்டத்தில் தனித்து வாழும் பெண்கள் குறித்த நிலை அறிக்கையை மாநில அரசிடம் சமர்ப்பிக்க வேண்டும், அது ஒரு வாரத்திற்குள் அரசு இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். நிலமையை விவரிக்கும் அறிக்கையில் முந்தைய காலகட்டத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கை மற்றும் அடுத்த கட்டத்திற்கான செயல் திட்டம் ஆகியவை இருக்க வேண்டும்.

16. Point 1.6.1 of Tamil Nadu State Policy for Single Women 2021 (Draft) All single and women-headed households may be given 50 additional person-days of employment under MGNREGS.

மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு சென்னை
m: 86680 91453 | e: womensrights@hrf.net.in | www.hrf.net.in